# கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 3 - சமாரிய ஸ்திரீ




கிருபையைப் பற்றிக் கொண்டவர்கள் பாகம் இரண்டில், நாம் எவ்வாறு ரோம சிறைச்சாலைக்காரன் பவுலின் மூலமாய் தேவ கிருபையைப் பெற்று இரட்சிக்கப்பட்டான் என்பதை கண்டோம். அதே வேளையில் முதலாம் பாகத்தில் ஆண்டவர் எப்படிப்பட்டவரோ என்று பார்க்க வந்த சகேயுவை, ஆண்டவர் எப்படி இரட்சித்தார் என்பதையும் கண்டோம். இப்பாகம் மூன்றில், சகேயுவை போல் ஆண்டவரை பற்றி எதுவும் கேள்விப்படாமல், அன்றாட வேலையான கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்த சமாரிய ஸ்திரீயை ஆண்டவர் சந்தித்து, அவளுடன் நேர்முகமாக உரையாடி, ஆண்டவர் அவளுக்கு அருளி இருக்கும் தேவ கிருபையை, ஈவை அவளுக்கு விளங்க காட்டி அவளை ரட்சித்தார். அவள் இரட்சிக்கப்பட்டது மட்டுமல்லாமல், உடனே தான் இருந்த ஊரில் உள்ள மக்கள் அனைவருக்கும் ஆண்டவரை பற்றி கூறி, அவர்களும் ஆண்டவரே, கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கும்படியாய் செய்தாள். இங்கு ஆண்டவர் அவளை சந்தித்தது ஏதோ தற்செயலாய் நடந்த சம்பவம் போல் தோன்றலாம், ஆனால் தேவ திட்டத்தில் எதுவும் தற்செயல் கிடையாது, யாவும் தேவ முன்குறித்தலின்படியே நடப்பவையாகும். சமாரிய ஸ்திரீக்கு ஆண்டவர் தன்னை சந்தித்தது ஏதோ தற்செயலான காரியம் போல தோன்றினாலும், அவளைக் கொண்டு, அவளுடைய ஊரில் உள்ளோரை இரட்சிப்பிற்குள்

கொண்டு வருவது தேவத்திட்டமாய் இருந்தது. எனவே இப்படிப்பட்ட அற்புதமான ஒரு நிகழ்வை நாம் தொடர்ந்து தியானிப்போம்.

**யோவான் 4ஆம்** அதிகாரத்தில் இச்சம்பவம் விரிவாக கூறப்பட்டுள்ளது. **யோவான் 4:1,2** இல் **"யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்."**. இங்கு இரட்சிப்பின் சுவிசேஷம் பரம்புகிறதை குறித்து பரிசேயர் கேள்விப்பட்டதை ஆண்டவர் அறிந்தபோது, அவர் யூதேயாவை விட்டு கலிலேயாவுக்கு போனார் என்று வேதம் கூறுகிறது. இங்கு பரிசேயர் கேள்விப்பட்டனர் என்பது, அவர்கள் இதைக்கேட்டு ஆண்டவருடைய ஊழியத்தை தடை செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டதையே கூறுகிறது. எனவே ஆண்டவர் கலிலேயாவிற்கு கடந்து செல்ல எண்ணினார். இதற்கான காரணத்தை ஆண்டவரே அறிவார். ஆனால் அதே நேரத்தில், யூதேயா மற்றும் கலிலேயா ஆகிய இடங்களுக்கு இடையே உள்ள சமாரிய மக்களையும் ஆண்டவர் சந்திக்க நினைத்தார். சமாரிய மக்களும் இஸ்ரவேலராக இருந்தபோதும், அசீரிய படையெடுப்பில் அவர்கள் புறஜாதியாரோடு கலந்தபடியால், யூதர்கள் அவர்களை அன்னியர்களாகவே கருதினர். எனவே யூதேயா மற்றும் கலிலேயா நடுவே இருந்த சமாரிய மக்கள், தனித்து விடப்பட்டிருந்தனர். ஆனால் ஆண்டவர் அவர்களை சந்திக்க, சித்தம் கொண்டு கடந்து சென்றார். அவர்களை சந்திக்க தான் உபயோகப்படுத்தும் கருவியாக சமாரிய பெண்ணை தெரிந்தெடுத்தார். அவளுக்கு சத்தியம் ஒவ்வொன்றையும் அருமையாக விளக்கி காட்டினார். அதன் மூலம், அவள் ஊர் முழுவதையுமே ஆண்டவர் சந்தித்தார்.

**யோவான் 4:4-7** உள்ள வசனங்களில் **"அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார். அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது. அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்."**. இங்கு ஆண்டவர் சீகாருக்கு வந்ததும், கலைப்படைந்தவராய் ஆறாமணி வேளையிலே கிணற்றின் அருகே உட்கார்ந்ததும், சீஷர்கள் ஊருக்குள்ளே சென்றதும் என நடந்தவை யாவும் ஒரு சாதாரண நிகழ்வாக நாம் காணலாம். குறிப்பாக ஆண்டவர் பிரயாணத்தினால் இளைப்படைந்தார் என்பது ஆறாம் மணி

வேலையாகிய (பகல் 12 மணி) அவ்வேளையில், ஒருவேளை வெயிலின் உஷ்ணத்தில், காலை உணவு கூட உன்னாதவராய் அவர் சீஷர்களோடு நடந்து வந்திருக்கலாம். ஆனால் ஒருபுறம் ஆண்டவரின் சரீரம் இளைப்படைந்தாலும், அவருடைய ஆவிக்கு தெரியும் தாம் ஏன் இங்கு இருக்கிறோம் என்று.

**"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்." (யோவான் 4:8).** இளைப்படைந்து அமர்ந்து இருக்கும் ஒருவர் சாதாரணமாக கேட்பது போல் தாகத்துக்கு தா என்று ஆண்டவர் நேரடியாக சமாரிய ஸ்திரீயுடன் இடைப்பட ஆரம்பிக்கின்றார். ஆனால் அவளோ அவர் தாகமாய் இருப்பதை காட்டிலும் தோற்றத்தில், பேச்சில் அவர் யூதர் என்பது வெளிப்படையாய் தெரிந்ததால், **"யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர் களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்." (யோவான் 4:9).** இங்கு அவள் இவ்வாறு கேட்டவுடனே, ஆண்டவராகிய, **"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." (யோவான் 4:10).** இங்கு ஆண்டவர் உடனடியாக ஆவிக்குரிய காரியங்களை அவளுடனே பேச ஆரம்பிக்கிறார். மேலும் வேறு எவரிடமும் தம்மை குறித்த காரியங்களை நேரடியாக இவ்வாறு தனிப்பட்ட முறையில் ஆண்டவர் விரிவாக கூறாத பொழுது, இங்கு இப்பெண்ணிடம் கூறுவது, யூதர்களுக்கு அந்நியராய் காணப்படும் அவளும், அவளுடைய ஊராரும், தேவ கிருபையை, தேவ ஈவை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கே ஆகும். மேலும் ஜீவத்தண்ணீரான தேவ ஆவியானவரை பற்றியும் ஆண்டவர் கூறுகிறார்.

ஆனால் இதை புரிந்து கொள்ளாத அப்பெண், ஆண்டவர் மாம்ச ஜீவனை காப்பதற்கான தண்ணீரைப் பற்றிதான் கூறுகிறார் என்று நினைத்து, **"அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்." (யோவான் 4:11,12).** உடனே ஆண்டவர் தமது சம்பாஷணையை ஆவிக்குரிய அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்கிறார்.

**"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்." (யோவான் 4:13,14).** ஆனால் இங்கு ஆண்டவர் சரீர பிரகாரமான தண்ணீரைப் பற்றி பேசவில்லை என்பதை இன்னும் உணர்ந்து கொள்ளாத அப்பெண், **"அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்." (யோவான் 4:15).** தான், ஆவிக்குரிய காரியங்களை கூறியும் அதை உணர்ந்து கொள்ள முடியாத, இஸ்ரவேலில் போதகனாயிருந்த நிக்கொதேமுவிடம், இதற்கு முன் **யோவான் 3ஆம்** அதிகாரத்தில், எவ்வாறு ஆவிக்குரிய காரியங்களை விளங்க காட்டினாரோ, அதேபோல் இச்சமாரிய பெண்ணிடமும் ஆண்டவர் வேறு விதத்தில் தமது சம்பாஷனையை தொடர்கிறார்.

**"இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்." (யோவான் 4:16).** இங்கு ஆண்டவர், உடனடியாக அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் இடைபட ஆரம்பிக்கிறார். மேலும் **"அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்." (யோவான் 4:17,18).** ஆண்டவர் அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் நிலை குறித்து விரிவாக அவளுக்கு கூறுகிறார். **"அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்." (யோவான் 4:19)** என்றாள். இப்பொழுது தான் இவ்வளவு நேரம் தான் பேசிக் கொண்டிருப்பது ஒரு சாதாரண யூத மனிதரோடு அல்ல, அவர் கூறிய காரியங்களும் மாம்சத்திற்குரியது அல்ல, என்பதை அவள் உணர்ந்து கொள்ள ஆரம்பிக்கிறாள்.

உடனே அவளும், தன்னுடைய சம்பாஷனையை ஆவிக்குரியவிதமாக மாற்றி, **"எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுது கொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள்." (யோவான் 4:20).** இங்கு அந்த ஸ்திரீ, ஒரே ஆண்டவரை தொழுதாலும், யூதருக்கும் சமாரியர்க்கும் இடையே உள்ள காரியங்களை குறித்து ஆண்டவரிடம் வினவுகிறாள். உடனே ஆண்டவர் அதற்கான பதிலை விரிவாக **யோவான் 4:21-24**

வசனங்களில் **"அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்."**. இவ்வாறு அருமையாக ஆவிக்குரிய காரியங்களை பற்றி ஆண்டவர் கூறியவுடன், அந்த ஸ்திரீ ஆவிக்குரிய அடுத்த கட்டத்திற்கு சென்று யூதர்களைப் போல் தாங்களும் மேசியாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை ஆண்டவரிடம் கூறுகிறாள். **"அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்." (யோவான் 4:25)**. உடனே ஆண்டவர், **"அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்." (யோவான் 4:26)**. இங்கு ஆண்டவர், ஒரு தனிப்பட்ட ஆத்மாவின் இரட்சிப்பிற்காக, தேவத்திட்டம் முழுவதையும், தான் யார் என்பதையும், வெளிப்படையாக அவளிடம் கூறுகிறார்.

இதற்கு இடையில், **"அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை." (யோவான் 4:27)**. இங்கு யூதர்களாகிய சீஷர்களுக்கு, ஆண்டவர் சமாரிய ஸ்திரீயுடன் பேசுவது ஆச்சரியமாக கண்டது. ஆனால் அன்று அவர்களுக்கு தெரிந்திருக்காது, ஒரு நாள் எருசலேம் சமாரியா மாத்திரமல்ல பூமியின் கடைசி பரியந்தம் வரைக்கும் உள்ள சகல ஜாதி மக்களுக்கும், மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவை பற்றி தாங்கள் கூற போகிறோம் என்று. **"அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி: நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்." (யோவான் 4:28,29)**. இங்கு ஆண்டவருடைய பதிலை கேட்ட அந்த ஸ்திரீ, தான் எதற்காக (தண்ணீர் மொள்ள) இவ்வளவு தூரம் வந்தோமோ அதை மறந்து விட்டு, ஊருக்குள்ளே ஓடி ஆண்டவரை குறித்து சாட்சி கொடுத்து, தன்னை பற்றிய காரியங்களை

ஆண்டவர் வெளிப்படுத்தியதை அடுத்து, அவர்தான் தாங்கள் எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்துவாகிய மேசியாவோ என்று பார்க்க அனைவரையும் அழைத்தாள். இங்கு ஆண்டவர் அந்த ஸ்திரீயின் தனிப்பட்ட வாழ்க்கையை குறித்து கூறியதே அவளை மிகவும் தொட்டது. இங்கு அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையை குறித்து குறிப்பாக, ஐந்து புருஷரை குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும், அதை காட்டிலும் மேசியாவின் வருகையை குறித்த அவளுடைய உள்ளத்தின் வாஞ்சையையே, ஆண்டவர் பெரியதாக எண்ணினார்.

**யோவான் 4:30** கூறுகிறது, **"அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்."**. இங்கு ஊரில் உள்ள அனைவரும் வர காரணம், அவள் அவரைக் குறித்து அறிவித்த விதமே. இதற்கு இடையில், **"இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள்." (யோவான் 4:31)**. ஆனால் ஆண்டவரோ, **"அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்." (யோவான் 4:32)**. இதனால், **"அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பானோ என்றார்கள்." (யோவான் 4:33)**. இங்கு ஆண்டவர் தமக்குரிய போஜனமாக எதை குறிப்பிடுகிறார் என்பதை அப்போஸ்தலர்களாகிய சீஷர்கள் கூட விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே ஆண்டவர், **"இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது." (யோவான் 4:34)** என்றார். மேலும், **"அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்." (யோவான் 4:35-38)**. இங்கு ஆண்டவர் சுவிசேஷ ஊழியத்தின் மேன்மையை, முக்கியத்துவத்தை பற்றி சீஷரிடம் கூறி, யூதர்களாகிய சீஷர்கள் புறஜாதி மக்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டியவர்கள் என்பதை சமாரிய ஸ்திரீயின் மூலம் வெளிப்படுத்துகிறார். **யோவான் 4:39,40** கூறுகிறது, **"நான்**

**செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டுநாள் அங்கே தங்கினார்.".** இங்கு, **சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம்** என்பது மிகவும் முக்கியமானது. அவளுடைய வார்த்தைகளே, சுவிசேஷ விதைகளை அவள் ஊர் மக்கள் இருதயத்தில் விதைத்தது. மேலும், **"அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து, அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்." (யோவான் 4:41,42).** இங்கு, **உன் சொல்லினிமித்தம் அல்ல** என்ற வார்த்தையானது, அவளால் கிரியை நடப்பிக்கப்படவில்லை என்று அர்த்தம் அல்ல. அவளுடைய வார்த்தையே அவர்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் அழைத்துச் சென்றது. ஆனால் ஆண்டவருடைய வார்த்தையே, அவரே கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்பதை அவர்கள் அறிந்து விசுவாசிக்கும்படியாய் செய்தது. எனவே நாம் செய்ய வேண்டிய காரியங்களை நாம் செய்தோமானால், மீதியானவற்றை தேவனே பொறுப்பேற்றுக் கொள்வார் என்பதை நாம் இங்கு அறிந்து கொள்ளலாம்.

எனவே, இங்கு சில நிமிடங்கள் ஆண்டவரோடு தனிப்பட்ட முறையில் உரையாடிய அந்த சமாரிய ஸ்திரீ, தனக்கு கொடுக்கப்பட்ட அந்த சிறிய தருணத்தை (கிருபையை) சரியாக பற்றிப்பிடித்துக்கொண்டு, தான் இரட்சிக்கப்பட்டது மட்டுமல்ல, தன் ஊராரின் இரட்சிப்புக்கும் அவள் காரணமானாள். இவ்வாறாக அனேக மக்களை, குறிப்பாக புற ஜாதி மக்களை ஆண்டவரிடம் கொண்டு வருவது, சீஷர்களுக்கும் ஒரு நல்ல பயிற்சியாய் அமைந்தது. ஆண்டவர் பறமேறி சென்ற பின்பு, தாங்களும் சமாரிய ஸ்திரீயை போல், ஒருநாள் புறஜாதிகள் மக்கள் மத்தியில் தங்கள் சாட்சியை கூறி அவர்களை ஆண்டவர் அண்டை அழைத்து வர வேண்டும் என்பதை, சீஷர்கள் உணர்ந்து கொள்ளும்படியாய் ஆண்டவர் சமாரிய ஸ்திரீயை பயன்படுத்தினார். இந்த ஸ்திரீயை குறித்து, இதற்கு பின் வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடபடாமல் இருந்தாலும், நிச்சயமாக அவள் தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்திருப்பாள். ஆண்டவரே கிறிஸ்துவாகிய உலகரட்சகர், அவரே மேசியா என்பதை அநேகருக்கு இந்த சம்பவத்தை கூறி அறிவித்திருப்பாள். நிச்சயமாக அநேகர் நித்திய ஜீவனை கண்டடைய, அவள் காரணமாய் இருந்திருப்பாள். இன்று மாம்சத்தின்படி

யூதராய் இராத நமக்கும் அவள் ஒரு முன்னோடியாய் காணப்படுகிறாள். எனவே தனக்கு கொடுக்கப்பட்ட ஒரு சிறு கிருபையின் தருணத்தை பற்றி பிடித்துக்கொண்டு, எவ்வாறு ஆண்டவருக்கு மகிமையாக அவள் வாழ்ந்தாளோ, அப்படிப்பட்ட வாழ்வை நாமும் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கும் கிருபை பாராட்டுவாராக. ஆமென், அல்லேலூயா.